தகவல் அறிவும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 3214/F/2024**

திரு.சா.சலீம், .. புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்பு செயலாளர்,
நிதித்துறை, .. பொது அதிகார அமைப்பு
தலைமைச்செயலகம்

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.சா.சலீம், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.வை.ஜெமினிகணேஷ், பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 03.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "1.தருமபுரி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6174/அ4/2007, 2) அரசாணை (நிலை) எண்.220, பள்ளிக்கல்வித் (எஸ்2)துறை, நாள் 10.11.2008, 3)தலைவர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் சென்னை-600 006 கடிதம் எண்.5015/ஆ4/2008, 4).தருமபுரி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2378/அ4/2009, நாள் 15.07.2009, 5) 6 வது ஊதியக்குழு -ன் தொடர்பான ஆவணங்களை வழங்கிடுமாறு கோருகிறேன்" என்பன போன்ற தகவல்களை 17

இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், நிதிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர், அரசு சார்புச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்கள் கடித எண்.E-7585133/சிஎம்பிசி/2024-2, நாள் 28.06.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் இனம் வாரியாக வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் பெறப்படாததால் மனுதாரர், 08.07.2024 நாளிட்ட பிரிவு **18(1)**-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து கடித எண்.E-7585133/சிஎம்பிசி/2024-2, நாள் 28.06.2024 தேதியிட்ட கடிதத்தில் இனம் 1 முதல் 6 மற்றும் 15 முதல் 17 வரையில் உள்ள இனங்கள் பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றப்பட்டுள்ளதாகவும், மற்ற இனங்களான 7, 8, 9, 10, 12, மற்றும் 13-க்கு தகவல்கள் இனம் வாரியாக உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையான தகவல்களாக வழங்கப்படவில்லை என்று தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் கடித எண்.E-7585133/சிஎம்பிசி/2024-2, நாள் 28.06.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கியுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து ஏற்கிறது. மேலும், மனுதாரரின் தகவல் பெறும் உரிமை சட்ட மனுவில் கோரியுள்ள இனம் 1 முதல் 6 மற்றும் 15 முதல் 17 வரையில் உள்ள தகவல்கள் குறித்து மனுதாரர் உரிய பொது அதிகார அமைப்பிற்கு மனு செய்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டு, இப்புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்பு செயலாளர்,
நிதித்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-09.

**<u>மனுதாரர்</u>**

திரு.சா.சலீம்,
4/76, பொதுப்பணித்துறை குடியிருப்பு,
சூளகிரி,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 117.

Copy to: File NS/PA-